தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.

தொலைபேசி: 044 – 22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை மு. மாலிக் பெரோஸ்கான் இ.ஆ.ப (ஓ)

*******

ஆணை எண். 207/2019

நாள். 13.09.2021

திரு A. ராஜசேகர்,
முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் – முறையீட்டு மனுதாரர்
மார்த்தாண்டம்

1)திருமதி எஸ். பிரம்மசக்தி,
முன்னாள் நகராட்சி பொதுப்பணி
மேற்பார்வையாளர், குழித்துறை நகராட்சி
2)எஸ். பேரின்பம்,
நகராட்சி பொறியாளர், குழித்துறை நகராட்சி – எதிர்மனுதாரர்கள்

கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம், கண்ணக்கோடு வார்டு எண். 11, பந்தல்விளை என்ற முகவரியில் வசிக்கும் முன்னாள் நகர்மன்ற உறுப்பினர் திரு A. ராஜசேகர் அவர்களின் 10.12.2019 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 207/2019 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்கண்டவாறு ஆணையிடப்படுகிறது:-

## ஆணை

கன்னியாகுமரி மாவட்டம், மார்த்தாண்டம், கண்ணக்கோடு வார்டு எண். 11, பந்தல்விளை என்ற முகவரியில் வசிக்கும் திரு A. ராஜசேகர் தன் முறையீட்டு மனுவில் கீழ்க்காணும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

(i) கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை நகராட்சியில் Sir. C.V. ராமசாமி ஐயர் சிறு பூங்கா ஒன்று நகராட்சி பராமரிப்பில் உள்ளது. அதற்கென்று ஒரு அறக்கட்டளையும் உள்ளது. குழித்துறை நகராட்சியானது அந்த அறக்கட்டளையின் அனுமதி பெறாமல் அதன் புராதான சின்னங்களை மறைக்கும் நோக்கிலும் நகராட்சி பணத்தை கொள்ளை அடிக்கும் நோக்கிலும் பராமரிப்பு பணிகள் செய்ய தீர்மானித்து ரூபாய் 8.50 லட்சம் (ரூபாய் எட்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும் ) செலவில் பணிகள் செய்ய ஒப்பந்த புள்ளி கோரி நகராட்சி ஒப்பந்தகாரர் மூலம் பணிகள் நடைபெற்று முடிந்தது.

(ii) இந்த நிலையில் நகராட்சி பொது பணி மேற்பார்வையாளர் திருமதி. S.பிரம்மசக்தி மற்றும் நகராட்சி அதிகாரிகளும், நகராட்சி ஒப்பந்தகாரரும் கூட்டு சேர்ந்து அதே பூங்காவில் நான்கு மாதங்கள் கழித்து மீண்டும் கூடுதல் பணிகள் ரூபாய். 9,90,000/– (ரூபாய் ஒன்பது லட்சத்து தொன்னூறு ஆயிரம் மட்டும்) என ஏற்கனவே பராமரிப்பு பணி செய்த அதே ஒப்பந்தகாரர் பெயரில் ஒப்பந்தபுள்ளி கோரியதாக, பில்தொகை வழங்கி நகராட்சி பணம் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி முறைகேடுகளில் ஈடுபட்டவர்களின் மீது சட்டபூர்வமான நடவடிக்கை எடுத்து கொள்ளையடித்த நகராட்சி பணத்தை மீட்டெடுக்குமாறு முறையீட்டு மனுதாரர் திரு A. ராஜசேகர் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மனுதாரர் திரு A. ராஜசேகர் அளித்த முறையீட்டு மனு சம்பந்தமாக 16.12.2019 நாளிட்ட அழைப்பாணையில் மனுதாரர் திரு A. ராஜசேகர் 11.02.2020 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடக்கும் விசாரணைக்கு ஆஜராகுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டார். ஆனால் அவர் 11.02.2020 அன்று விசாரணைக்கு ஆஜராகவில்லை. இம்முறை மன்ற நடுவத்தின் 12.07.2021 நாளிட்ட அழைப்பாணையில் மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் 09.08.2021 அன்று முறைமன்ற நடுவத்தில் நடக்கும் விசாரணைக்கு ஆஜராகுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டனர். 09.08.2021 அன்று நடந்த விசாரணையில் மனுதாரர் ஆஜராகவில்லை. அதே நாளில் நடைபெற்ற விசாரணையின்போது கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறை நகராட்சியில் பொதுப்பணி மேற்பார்வையாளராக பணிபுரிந்த திருமதி பிரம்மசக்தி மற்றும் நகராட்சி பொறியாளர் திருமதி. பேரின்பம் ஆகியோர் ஆஜராகி கீழ்க்கண்டவாறு வாக்குமூலம் அளித்தார்கள்.

1.திருமதி பிரம்மசக்தி, பொதுப்பணி மேற்பார்வையாளர் தமது வாக்குமூலத்தில்:–

" கன்னியாகுமரி மாவட்டம் குழித்துறை நகராட்சியில் சர்.சி.வி. ராமசாமி ஐயர் பூங்கா குழித்துறை நகராட்சியின் பராமரிப்பில் உள்ளது. மேற்கண்ட பூங்காவின் அபிவிருத்திப் பணிக்காக 14–வது மத்திய நிதிக்குழு மானியத்தின் கீழ் முதற்கட்டமாக 8.50 லட்சம் (ரூபாய் எட்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும் ) மற்றும் இரண்டாம் கட்டமாக நகராட்சியின் பொது நிதியின் கீழ் ரூ.9.90 லட்சம் (ரூபாய் ஒன்பது லட்சத்து தொன்னூறாயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேற்கண்ட நகராட்சியைச் சேர்ந்த பொதுமக்களின் வேண்டுகோளுக்கேற்ப மேற்கண்ட ஒதுக்கீட்டுத்தொகையில் உரிய அனுமதியுடன் பூங்காவின் பழுதடைந்த சுற்றுச் சுவரை சரி செய்தல் , பொது மக்கள் நடைபயிலும் பொருட்டு நடைபாதையில் டைல்ஸ் பதித்தல், பூங்காவில் உள்ள நீரூற்றை சரி செய்து இயங்கச் செய்தல், பூங்காவையொட்டி நுண்ணுயிர் உரக்கூடம் (onsite compost) அமைத்தல் மற்றும் பூங்காவின் நுழைவுவாயில் கதவு (gate) அமைத்தல் மற்றும் வாவுபலி பொருட்காட்சி சம்பந்தமான சுற்றுலாத்தலங்களின் படங்களை பூங்காவின் சுவற்றில் வரைதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டன. எனவே மேற்கண்ட பூங்கா அபிவிருத்திப் பணியில் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை. " என தெரிவித்துள்ளார்.

2. திருமதி செ.பேரின்பம், குழித்துறை நகராட்சி பொறியாளர் தமது வாக்குமூலத்தில்:–

" கன்னியாகுமரி மாவட்டம், குழித்துறை நகராட்சியில் சர்.சி.வி. ராமசாமி ஐயர் பூங்கா நகராட்சி பராமரிப்பில் உள்ளது. மேற்கண்ட பூங்காவின் அபிவிருத்திப் பணிக்காக முதற்கட்டமாக 8.50 லட்சம் (ரூபாய் எட்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும் ) மற்றும் இரண்டாம் கட்டமாக ரூ.9.90 லட்சம் (ரூபாய் ஒன்பது லட்சத்து தொன்னூராயிரம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்பட்டு, உரிய அனுமதியுடன் மேற்கண்ட தொகையில் காம்பவுண்ட் சுற்றுச்சுவரை அதிகப்படுத்துதல், பொதுமக்கள் நடைபயிலும் பொருட்டு நடைபாதையில் டைல்ஸ் பதித்தல், பூங்காவில் உள்ள நீரூற்றை செம்மைபடுத்துதல், பூங்காவையொட்டி நுண்ணுயிர் உரக்கூடம் (on site Compost) அமைத்தல் மற்றும் பூங்காவின் நுழைவுவாயிலில் கதவு (Gate) அமைத்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன. மேற்கண்ட பூங்கா அபிவிருத்திப் பணியில் எவ்வித முறைகேடும் நடைபெறவில்லை" என்று தெரிவித்துள்ளார்.

4. முறையீட்டு மனுதாரரின் குற்றச்சாட்டுக்கள் குறித்து இம்முறை மன்ற நடுவத்தின் 16.12.2019 நாளிட்ட கடிதம் மூலம் குழித்துறை நகராட்சி ஆணையாளரின் அறிக்கை கோரப்பட்டது. குழித்துறை நகராட்சி ஆணையர் 26.12.2019 நாளிட்ட தனது அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:–

"(i) மனுதாரர் திரு A. ராஜசேகர் அவர்கள் அளித்த புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள சர்.சி.பி. ராமசாமி ஐயர் பூங்கா நகராட்சியின் பராமரிப்பில் உள்ளது. மேற்படி பூங்கா அமைந்துள்ள இடமானது நகரபுல எண். C3/59–ன்படி குழித்துறை நகராட்சிக்கு சொந்தமானதாகும். மேற்படி பூங்கா பல ஆண்டுகளாக பயன்பாடின்றி இருந்தது.

(ii) இந்நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையரின் ந.க.எண். 14989/பி1/2016/2, நாள்.22.09.2017–ன்படி,14வது நிதிக்குழு மானியம் 2017–2018 ன் கீழ் இந்நகராட்சிக்கு சொந்தமான பூங்காவை பராமரிப்பு செய்ய மானியம் ஒதுக்கீடு செய்து உத்தரவிடப்பட்டது. மேற்கண்ட செயல்முறை ஆணையின்படி பூங்கா பராமரிப்பிற்கு 8.50 லட்சம் (ரூபாய் எட்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும் ) ஒதுக்கீடு செய்யப்பட்டு நகர்மன்ற தீர்மானம் எண்.3026, நாள். 09.01.2018–ன்படி நகராட்சி மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. பணியின் அவசியம் கருதி 15.12.2017 அன்று ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டது. இம்மதிப்பீட்டில் கீழ்கண்ட பணிகள் செய்து முடிக்கப்பட்டது:–

1)முட்புதராக இருந்த இடத்தினை சுத்தம் செய்து Red Gravel போடப்பட்டு சமதளமாக்கி Grill –உடன் கூடிய சுற்று சுவர் அமைத்தல்.

2)சிறுவர்களுக்கான பொழுதுபோக்கு விளையாட்டு பொருட்கள் வாங்கி பொருத்துதல்.

3)நடைபாதையில் பேவர் பிளாக் தளம் அமைத்தல்.

4)நீரூற்றினை சுற்றிலும் வண்ண தள ஓடுகள் பதித்தல்.

(iii) மேற்கண்ட பணிகள் செய்து முடிக்கப்பட்டும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு முழுமையாக கொண்டு வர இயலாததால் கூடுதலாக சில அத்தியாவசிய பணிகள் மேற்கொள்வதற்கு ரூ.9.90 லட்சம் (ரூபாய் ஒன்பது லட்சத்து தொன்னூராயிரம் மட்டும்) மதிப்பீடு தயார் செய்யப்பட்டு, நகர்மன்ற தீர்மானம் எண்.3092, நாள். 23.04.2018ன்படி மன்ற அனுமதி பெற்று ஒளிவு மறைவற்ற ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டு கீழ்கண்ட பணிகள் மேற்கொள்ளப்பட்டது:–

1)நகராட்சி அலுவலகத்தின் முன்பக்கம் பூங்கா அமைந்துள்ளதால் உட்புறமாக பொதுமக்கள் பயன்படுத்தும் வகையில் படிகள் அமைத்தல்.

2)பூங்காவில் சேகரமாகும் குப்பைகளை உரமாக்குவதற்கு நுண்ணுயிர் உரக்கூடம் அமைத்தல்.

3)அலங்கார சுற்றுச் சுவர் மற்றும் பூங்காவினை எழிலூட்டும் வகையில் வண்ணப்படங்கள் வரைதல்.

4)முன்பக்க வாயிற்கதவு, இருக்கை வசதி, மின்வசதி, குடிநீர் வசதி செய்தல்.

மேற்கண்ட அனைத்துப்பணிகளும் செய்து முடிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டு நல்ல நிலையில் உள்ளது என்று தமது அறிக்கையில் தெரிவித்து அதற்கு ஆதார ஆவணமாக நல்லநிலையில் உள்ள பூங்காவின் புகைப்பட நகல்களையும் இணைத்துள்ளார். மேலும் அன்றைய நாளில் பொறுப்பில் இருந்த ஆணையாளர், பொறியாளரின் அனுமதி பெற்றுதான் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது; இதில் தொழில் நுட்ப முறையில் எவ்வித முறைகேடும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.

5. இந்நேர்வில் முறையீட்டு மனுதாரரின் மனு, குழித்துறை நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் இம்முறையீட்டு மனு சம்பந்தமாக தொடர்புடைய குழித்துறை நகராட்சியில் பொதுப்பணி மேற்பார்வையாளராக பணிபுரிந்த திருமதி பிரம்மசக்தி மற்றும் குழித்துறை நகராட்சி ஆணையர் சார்பாக குழித்துறை நகராட்சி பொறியாளராக பணிபுரியும் திருமதி செ. பேரின்பம் ஆகியோர் அளித்த வாக்குமூலங்கள் இம்முறை மன்ற நடுவத்தால் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டன.

6. குழித்துறை நகராட்சியில் அமைந்துள்ள சர்.சி.வி. ராமசாமி ஐயர் பூங்கா நகராட்சியின் பொறுப்பில் உள்ளதாலும், அந்த பூங்கா பல ஆண்டுகளாக பயன்பாடின்றி இருந்ததால் பூங்காவை பராமரிப்பு செய்ய ரூ.8.50 லட்சம் (ரூபாய் எட்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும் ) மேலும் சில அத்தியாவசிய பணிகள் பூங்காவில் மேற்கொள்ள ரூ.9.90 லட்சம் (ரூபாய் ஒன்பது லட்சத்து தொன்னூராயிரம் மட்டும் ) நகர்மன்ற தீர்மானங்கள் மூலம் ஒப்புதல் பெறப்பட்டு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு ஒப்பந்ததாரருக்கு பணி வழங்கப்பட்டதாக குழித்துறை நகராட்சி ஆணையர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும் பூங்காவில் அனைத்துப் பணிகளும் செய்து முடிக்கப்பட்டு, பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டு நல்ல நிலையில் உள்ளதாகவும் ஆணையர் தெரிவித்துள்ளார். அதற்கு ஆதார ஆவணமாக பூங்காவின் புகைப்பட நகல்களையும் இணைத்துள்ளார். எனவே இந்நேர்வில் எவ்வித முறைகேடுகளும் நடந்ததாக தெரியவில்லை என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது.

7. முறையீட்டு மனுதாரர் இரண்டு முறை விசாரணைக்கு அழைத்தும் அளித்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி கொள்ளாமல் விசாரணைக்கு ஆஜராகவில்லை.

8. எனவே இந்நேர்வில் முறையீட்டு மனுதாரருக்கு கூறிக்கொள்ள ஏதும் இல்லை எனக்கருதி, குழித்துறை நகராட்சி ஆணையாளரின் அறிக்கை மற்றும் குழித்துறை நகராட்சி பொதுப்பணி மேற்பார்வையாளர் மற்றும் நகராட்சிப் பொறியாளர் ஆகியோர்களின்

வாக்குமூலத்தை ஏற்று இந்நேர்வின் மீதான மேல் நடவடிக்கையை இந்நிலையிலேயே முடித்துக் கொள்ளலாம் என் இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2021 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 13 ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

4-10-21

பெறுநர்

1)திரு A. ராஜசேகர்,
முன்னாள் நகர் மன்ற உறுப்பினர்,
வார்டு எண்.11, பந்தல்விளை,
கண்ணக்கோடு, மார்த்தாண்டம் – 629 165.
கன்னியாகுமரி மாவட்டம்.

2)நகராட்சி ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி,
குழித்துறை, மார்த்தாண்டம்,
கன்னியாகுமரி மாவட்டம்–629 165.

3)திருமதி பேரின்பம்,
நகராட்சி பொறியாளர்,
குழித்துறை நகராட்சி,
மார்த்தாண்டம் (அஞ்சல்)
கன்னியாகுமரி மாவட்டம் – 629 165.

4)திருமதி பிரம்மசக்தி,
பொதுப்பணி மேற்பார்வையாளர்,
குளச்சல் நகராட்சி,
கன்னியாகுமரி மாவட்டம்.

நகல்.
முறைமன்ற நடுவரின் தனிச் செயலர்
உதவி பதிவாளர்